ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

65

# திருக்குறளில் உவமை நலம்
# Parables in Thirukkural

**முனைவர் சி. அருள் செல்வம்**
**உதவி பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்(சுழற்சி2)**
**ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**ஆய்வுச் சுருக்கம்(ABSTRACT)** தொல்காப்பியம் தொல்காப்பியர் திருக்குறள்

இலக்கியத்தை அழகு படுத்துவது அணிகளே. பழந்தமிழர்களின் தலைசிறந்த இலக்கியமாகப் போற்றப்படுவது பாட்டும் தொகையும் ஆகும். ஆனாலும் வேத ஆகம நூல்களைக் காட்டிலும் சிறந்ததாக போற்றப்படுவது வள்ளுவப் பெருமகனார் தந்த உலகப் பொது மறையாம் திருக்குறள் எனில் மிகை ஆகாது. இந்தத் திருக்குறளில் அமையப் பெற்றுள்ள உவமை நலம் குறித்து இக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.

உவமை எனப்படுவது ஒன்றை உணர்த்துவதற்கு அதனோடு தொடர்புடைய மற்றொன்றை ஒப்பிட்டுக் காட்டுவது ஆகும். அதாவது புலவர்கள் தாம் கூற விளையும் பொருளை மற்றவர்களுக்கு உணர்த்த, அனைவரும் அறிந்த ஒன்றை ஒப்புமைப் படுத்திக் கூறுவதே உவமையாகும். தொல்காப்பியம் கூறும் உவமவியல் என்னும் இயலில் உவமை தோன்றும் நிலைக் களன்களைப் புலப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர்.

அணி இலக்கணத்தில் அணிகளுக்கு எல்லாம் உயர்ந்ததாக விளங்குவது உவமை அணி என்றே கூறுவர். இலக்கியத்தை அழகு படுத்தும் தாயணி உவமை அணி ஆகும். அது காலத்தால் மிகவும் முற்பட்டதாகவும் உள்ளது. தொல்காப்பியர் உவமவியல் என ஓர் முழு இயலையே வகுத்து இருப்பது போல , திருக்குறளிலும் முழுமைக்குமாக உவமையே இடம் பெறுகிறது என்பதே உண்மையாகும். அணிகளில் முதன்மையானதாகவும் பழமையானதாகவும் விளங்குகிறது உவமை அணி. இந்த உவமை அணியின் வகைகளாக வினை பயன் மெய் உரு என்ற நான்கின் அடிப்படையில் உவமை தோன்றும் என்பதனை ,

**வினைபயன் மெய்உரு வென்ற நான்கே**
**வகைபெற வந்த உவமைத்தோற்றம் தொல்.272**

என்ற தொல்காப்பிய நூற்பா கூறுகிறது மேலும் உவமையின் வகையினைத் தண்டியலங்கார ஆசிரியர் ,

**பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து**
**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை தண்டி.நூ30**

என்று பண்பு தொழில் பயன் என்ற மூன்று வகையில் சுருக்கமாக அடக்கியுள்ளார் இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள உவமையானது திருக்குறளில் அமையப்பெற்றுள்ள பாங்கினைக் குறித்து திருக்குறளில் உவமை நலம் என்பதைப் பொருண்மையாகக் கொண்டு இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

Keywords

உவமை - உவமை விளக்கம் - உவமை உறுப்பு - உவமையின் வகைகள் - வினை உவமம் - திருக்குறளில் உவமம்

**முன்னுரை**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழியே நம் தமிழ் மொழி. எழுத்து , வார்த்தை, பொருள், உச்சரிப்பு, இலக்கண, இலக்கியங்கள் என அனைத்தும் ஒன்றாகப் பெற்று அந்தந்த கால மாறுதல்களுக்கு ஏற்ப தன்னைப் புதுக்கிச் செதுக்கி சிறந்த மொழியே நம் தாய் மொழியான தமிழ் மொழி. அதுபோலவே , திருக்குறள் குறித்துக் கூறுமிடத்துத் தாய்மொழியாம் தமிழ் மொழியில் தோன்றியதும், பல்லாயிரம் ஆண்டுகால பழமை உடையதும்,

**வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்**

**ஓத வழுக் கற்ற உலகு** திருவள்ளுவ.37

என்று மதுரைப் பெருமருதனார் கூறுகின்ற வாக்கிற்கு ஏற்புடையதும் , உலகுக்கே பொதுமறையாக விளங்குகின்றதுமான சிறப்பு பெற்றதும் திருக்குறள் எனில் மிகையன்று. உலகமயமாக்கலுக்குள் அடியெடுத்து வைக்கும் காலகட்டமான இன்று சிறந்தே பிறந்த தமிழ் மொழியில் பிறந்து சிறந்த திருக்குறளை சிறப்பிக்கும் விதமாக இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள உவமையானது திருக்குறளிலும் நலம் பெற்று இருப்பதை எடுத்துக்காட்டும் விதமாக திருக்குறளில் உவமை நலம் என்னும் தலைப்பில் இவ்வாய்வு அமைகின்றது

**உவமை விளக்கம்**

உவமம் என்ற சொல்லே உவமை எனப்படுகின்றது. புரியாத ஒன்றைப் புரிந்து கொள்ள உதவுவது உவமை என்பதை,

**பொருளோடு பொருள் புணர்ந்து**

**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை தண்டி30**

என்கிறது தண்டியலங்காரம். நன்கு தெரிந்த ஒன்றை எடுத்துக்காட்டி தெரியாத ஒன்றை விளக்குவது உவமையாகும். எடுத்துக்காட்டாக , உலகம் எப்படித் தோன்றியிருக்கக்கூடும் என்ற ஐயம் ஏற்படுமாயின் அதனைப் புரிந்து கொள்ளச் செய்யும் முகத்தான் தமிழ் மொழியில் , எழுத்துக்கள் ஒவ்வொன்றும் மூல எழுத்தான அகரம் என்ற எழுத்தை முதன்மையானதாகக் கொண்டு தோன்றி இருப்பதை நாம் அறிந்து கொண்டுள்ளதைப் போல உலகம் ஆதி பகவனை முதலாகக் கொண்டு தோன்றியிருக்கிறது என்று உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை,

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

**பகவன் முதற்றே உலகு குறள் 1**

என்ற முதல் திருக்குறள் வழி வள்ளுவர் பெருந்தகை விளக்கிச் செல்வதனால் அறியலாகின்றது. அதுமட்டுமன்றி, உவமை என்பது எடுத்துக்கொண்டதான ஒரு சிறந்த பொருளை அதைவிடச் சிறந்த ஒரு பொருளோடு ஒப்புமைப்படுத்திக் கூறும் இடத்து , அவ்விரு பொருளும் இயல்பினில் ஒன்றியிருக்க வேண்டும் என்பது உவமைக்கே உரிய தனிச்சிறப்பாகும். உதாரணமாக ,

**மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்**

**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு குறள்65**

என்ற குறளில் , விளக்குவதற்காக எடுத்துக் கொண்ட பொருளாக , ஒருவர் தனக்குப் பிறந்த மென்மையான குழந்தைகளைத் தொட்டு தூக்குகின்ற பொழுது கிடைக்கின்ற மகிழ்ச்சியையும் , அதனை விளக்குவதற்காக கையாளப்படுகின்ற பொருளாக , குழந்தைகள் பேசுகின்ற மழலைச் சொற்களைக் கேட்கின்றபோது கிடைக்கின்ற மகிழ்ச்சியையும் இயல்பில் ஒன்றியிருக்கும் வண்ணம் திருவள்ளுவர் அமைத்து உவமை கூறியுள்ளதைக் காணும் இடத்து அவை ,

**உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும் தொல்.உவம8**

என்ற தொல்காப்பிய நூற்பாவை ஒத்திருப்பது படித்து இன்புறத்தக்கதாக அமைந்திருப்பதை அறிய முடிகின்றது.

மேலும், பொருளோடு பொறுள் புணரும் போது ஒரு பொருளோடு ஒரு பொருளும் , ஒரு பொருளோடு பல பொருளும் , பல பொருளோடு ஒரு பொருளும் , பல பொருளோடு பல பொருளும் என நான்கு வகையாக ஒப்புமைப்படுத்துவதை காணலாம். இந்த நான்கு நிலைகளையும் ,

**முறிமேனி முத்தம் முறுவல் வெளிநாற்றம்**
**மேலும் கண் வேந்ததோ ளவட்கு குறள்.1113**

என்ற ஒரே குறளில் காட்டியுள்ளார். இதில் தலைவன் ஒருவன் தன் காதலியின் அழகை கூறும் இடத்தில் ஒரு தளிர் ஒரு மேனிக்கும் , பல மூங்கில் இரு தோள்களுக்கும் , இரு கண்கள் ஒரு வேலுக்கும் , பல முத்துக்கள் ஒரு புன்னகைக்கும் பல இயற்கையான வாசம் ஒரு மேனியில் மனத்திற்கும் உவமையாக கூறுவதாக கூறியுள்ளது படித்து சுவைக்கத்தக்கது.

**உவமை உருபு**

உமத்தை உணர்த்தும் சொற்கள் உவம உருபுகள் எனப்படுகின்றது. இச்சொற்கள் வெளிப்படையாகவோ அல்லது மறைந்தோ வரும் தன்மையுடையது. பொருளோடு பொருள் ஒற்றுமைப்படுத்திக் கூறும் இடத்தில் இரண்டிற்கும் இடையே உவம சொற்களை கூறுவதனால் சரியான பொருள் புலப்பாடுகளை உணர்த்தமுடியும் என்பதுடன் எதிர்மறைப் பொருளாக சொல்லப்படுவதுமான நிலை தவிர்க்கப்பட வாய்ப்பாக அமைகிறது. அதனாலேயே பொருள் புலப்பாட்டிக்கு ஏற்ப உவம உருபுச் சொற்கள் கையாளப்படுகின்றன. உவம உருபுகள் எவை என்பதை கூறும் இடத்தில் நன்னூலார் ,

**போல புறைய ஒப்ப உறழ**
**மான கடுப்ப விஜப ஏப்ப மான கடுப்ப அன்ன**
**போலப் புரைய ஒப்ப உறழ**
**மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப**
**நேர நிகர அன்ன இன்ன**
**என்பவும் பிறவும் உவமைத் துருபே நன்.(367)**

என நன்னூலில் எனக் கூறியிருக்க, தொல்காப்பியர் உவம உருபுகளாக,

**அவைதாம்**
**அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப**
**என்ன மான என்றவை எனாஅ**
**ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க**
**என்ற வியப்ப என்றவை எனாஅ**
**எள்ள விழைய விறப்ப நிகற்ப**
**கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅ**
**காய்ப்ப மதிப்ப தகைய மருள**
**மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅ**
**புல்ல பொருவ பொற்ப போல**
**வெல்ல வீழ ஆங்கவை எனாஅ**
**நாட நனிய நடுங்க நந்த**
**ஓட புரைய என்றவை எனாஅ உவம.12**

என்கிறார். இதில் சொல்லப்பட்டுள்ள எல்லாச் சொற்களும் உவம உருபு சொற்களாக இருந்தாலும் மேற்சொல்லப்பட்டுள்ள எல்லாச் சொற்களும் இன்றைய சூழலில் உவம உருபுச் சொற்களாக பயன்பாட்டில் இல்லை. ஆனால் போல போன்ற என்னும் சொற்கள் உவம உருபுகளாக இன்றும் பெரிதும் பயன்பாட்டில் உள்ளன. அதேபோன்று, திருக்குறளில் காணுமிடத்து

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து குறள் 136**
**நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை**

**பூவன்ன கண்ணா ரகத்து குறள்.1305**

என ஒரு சில திருக்குறளில் இலக்கண நூல்களில் சொல்லப்பட்டுள்ள போல அன்ன போன்ற உவமை உருபுச் சொற்கள் நேரடியாக பயின்று வந்திருப்பதும்,

**இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார் குறள் 650**
**அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர் சேர்ந்தொழுகு வார் குறள் 691**

என ஒரு சில திருக்குறளில் அனைய போல்க என்பன போன்ற இலக்கண நூல்வல்லார் எடுத்தியம்பாத உவம உருபு சொற்கள் பயின்று வந்திருப்பதும்,

**வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று 678**

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய துயர்வு பைனல் 595**

எனப் பல திருக்குறளில் உவம உருபு சொற்கள் வெளிப்படையாகப் பயின்று வராமல் இருப்பதுமாக பல நிலைகளில் உவமைகள் படர்ந்து வந்து இருப்பது என்பது திருக்குறளுக்கு இன்னும் சிறப்பு தருவதாக உள்ளது.

**உவமையின் வகைகள்**

உவமையின் வகைகளாக உவமையின் வகையினைத் தண்டியலங்கார ஆசிரியர் ,

**பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து**
**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை தண்டி 30**

என்று பண்பு தொழில் பயன் என்ற மூன்று வகையில் சுருக்கமாக அடக்கியுள்ளார். மேலும் வினை பயன் மெய் உரு என்ற நான்கின் அடிப்படையில் உவமை தோன்றும் என்பதனை ,

**வினைபயன் மெய்உரு வென்ற நான்கே**
**வகைபெற வந்த உவமைத்தோற்றம் தொல் 272**

என்ற தொல்காப்பிய நூற்பா கூறுகிறது அதுமட்டுமின்றி மேற்சொன்ன நான்கு வகையிலான உவமமானது ஒவ்வொன்றும் சிறப்பு காரணமாகவும் நலன் காரணமாகவும் காதல் காரணமாகவும் வலிமை காரணமாகவும் தோன்றுவதே நன்மை பயக்கும் என்பதை ,

**சிறப்பே நலனே காதல் வலியோடு**
**அந்நால் பண்பும் நிலைக்களம் என்ப தொல்.உவம4**

என்கின்ற தொல்காப்பிய முற்பாவால் அறியலாம்.

**வினை உவமம்**

வினை என்ற சொல் செய்கின்ற செயலை(தொழிலை) குறிப்பதாகும். ஒரு பொருளோடு ஒரு செயலை ஒப்புமைப்படுத்திக் கூறுமிடத்துத் தோன்றுவது வினை உவமம் ஆகும். இந்த வினை உவமம் அன்ன ஆங்க மான விறப்ப என்ன உறழ தகைய நோக்கு என்னும் எட்டு நிலைகளில் தோன்றும் என்பதை ,

**அன்ன ஆங்க மான விறப்ப**
**என்ன உறழ தகைய நோக்கொடு**
**கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம் தொல்.உவம.12**

என்று இலக்கண நூல்கள் இயம்புகின்றன.

**திருக்குறளில் அன்ன உவமம்**

உவமைகளுக்கான உறுப்புகளில் ஒன்று அன்ன என்பதாகும். அன்ன என்ற சொல்லிற்கு போன்ற அல்லது நிச்சயமாக என்ற பொருளும் உண்டு. திருக்குறளில்

**பொய்யாமை அன்ன புகழில்லா எய்யாமை**

**எல்லா அறமும் தரும் குறள். 296**

என்ற திருக்குறளில் பொய் கூறாமை போன்று நிச்சயமாகப் புகழ் தரும் செயல் வேறில்லை என்பதை உணர்த்தும் வகையில் அன்ன என்ற சொல்லை திருவள்ளுவர் பயன்படுத்தி இருப்பதைக் காணலாம்.

**திருக்குறளில் ஆங்க உவமம்**

ஆங்க என்பது உவமைக்கான உறுப்புகளில் ஒன்று. ஆங்க என்ற சொல்லிற்கு அங்ஙனே அல்லது அவ்வாறு என்ற பொருளும் உண்டு. திருவள்ளுவர் திருக்குறளில் நம்மை வந்தடைகின்ற செல்வம் நிலையற்ற இயல்பினை உடையது. அத்தகைய செல்வமானது நம்மை வந்தடையுமானால் அச்செல்வத்தைக் கொண்டு அங்ஙனமே நிலையான அறங்களைச் செய்து விட வேண்டும் என்பதை ,

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**

**அற்குப ஆங்கே செயல் குறள். 333**

என்று கூறும் இடத்து இங்கே இடம்பெற்றுள்ள ஆங்க என்ற சொல்லிற்கு அங்ஙனே என்ற பொருள் கொள்ளும் படியாக திருவள்ளுவர் அமைத்திருப்பது சிறப்பாகும்.

**திருக்குறளில் மான உவமம்**

இரு பொருட்கள் ஒத்திருப்பதை உணர்த்தும் உவமைக்கான உறுப்புகளில் ஒன்று மான என்பதாகும். இங்கே பொருள் இருந்தும் கொடாதிருப்பதும் நன்மை தராத மகிழ்ச்சியோடு இருப்பதும் என்ற இரண்டும் அரசனுக்கு மான(ஒத்த) தன்மையுடைய குற்றங்கள் என்பதை ,

**இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா**

**உவகையும் ஏதம் இறைக்கு குறள். 432**

என்கிறார் திருவள்ளுவர்.

**திருக்குறளில் விறப்ப உவமம்**

விறப்ப என்பது உவமைக்கான உறுப்புகளில் ஒன்று. விறப்ப என்ற சொல்லிற்கு செறிவு அல்லது இறப்பு என்ற பொருளும் உண்டு. இதை ,

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**

**விழிப்பது போலும் பிறப்பு குறள் 339**

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இங்கே இறப்பு என்பது உறங்குவது போன்றது பிறப்பு என்பது விழிப்பது போன்றது என்கின்றார். அனைத்து உயிர்களுக்கும் இயல்பாக நிகழக்கூடிய உறங்குவதும் விழிப்பதுமான செயல்களை உலக இயக்கத்திற்கு காரணமான இறப்பு பிறப்பிற்கு செறிவாக்கியுள்ளமை திருவள்ளுவரின் சிறப்பாகும்.

**திருக்குறளில் என்ன உவமம்**

என்ன என்பதற்கு என்று சொல்லுதல் என்ற பொருளில் கையாண்டுள்ளார் வள்ளுவர் பெருந்தகை. இங்கே ,

**அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்**

**செல்வச் செவிலியால் உண்டு குறள் 757**

என்ற குறளில் அருள் என்னும் குழந்தையானது அன்பினால் மட்டுமின்றி பொருளாலும் கிடைக்கக்கூடியது என்று சொல்லுவர் என்பதாகக் கூறுகின்றார் .

**திருக்குறளில் உறழ்தல் உவமம்**

உறழ என்பது உவமைக்கான உறுப்புகளில் ஒன்று. உறழ என்பது முரணாதல் அல்லது எதிர்த்தல் என்பதை குறிப்பதாகும்.

**கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**

**நாவாயும் ஓடா நிலத்து குறள் 496**

என்ற குறளில் நிலத்திலே ஓடும் சக்கரத்தில் வலிமையுள்ள நெடுந்தேர் கடலிலே ஓடாதது. அது போன்றே கடலிலே ஓடும் நாவாயும் நிலத்தில் ஓடாது என்று ஒன்றிற்கொன்று முரணானதை உவமையாக்கி காட்டி இருப்பது எண்ணின் வியக்கத்தக்கது.

**பயன் உவமம்**

பயன் என்ற சொல் செய்கின்ற செயலினால் விளைகின்ற பயனைக் குறிப்பதாகும். ஒரு பொருள் செய்கின்ற செயலினால் விளைகின்ற பயனை ஒப்புமைப்படுத்திக் கூறும் இடத்து தோன்றுவது பயன் உவமம் ஆகும். இந்த பயன் உவமம் எள்ள விழைய புல்ல பொருவ கள்ள மதிப்ப வெல்ல வீழ என்னும் எட்டு நிலைகளில் தோன்றும். இதை ,

**எள்ள விழைய புல்ல பொருவ**
**கள்ள மதிப்ப வெல்ல வீழ**
**என்றாங்கு எட்டே பயனிலை உவமம் தொல்.உவம.13**

என்று தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் இயம்புகின்றது.

**திருக்குறளில் எள்ளல் உவமம்**

எள்ளல் என்ற சொல் இளிவு செய்தல் என்பதைக் குறிப்பதாகும். நகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்கான நிலைக்கலன்களில் எள்ளலும் ஒன்று. பேதையாவன் தான் செய்வதை இன்னதென்று அறியாதவன். அப்பேதையானவன் ஏழு பிறவிகளிலும் பிறந்து செய்யவிருக்கின்ற செயல்களால் அடைகின்ற துன்பம் என்ற பயனை தன் ஒரு பிறப்பிலேயே செய்து அடையல்லவன் என்று எள்ளல் செய்கிறார் திருவள்ளுவர். இதை

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக் காத்தும் அளறு குறள் 835**

என்கிறார் திருவள்ளுவர். இங்கு எள்ளல் உவமையானது இழிவு செய்தல் என்பதை குறிப்பதாக அமைந்துள்ளது.

**திருக்குறளில் விழைய, புல்ல உவமம்**

விழைதல் என்பது மிக விரும்புதல் என்பதையும் , புல்லல் என்ற சொல் புன்மையாதல் என்பதையும் குறிப்பதாகும். விரும்புதலும், புல்லுதலும் ஒரு பொழுதில் நேர்வதில்லை எனினும் இவ்விரண்டினையும்

**புலப்பேன் கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
**கண்அன்ன கேளிர் வரின் குறள் 1267**

என திருவள்ளுவர் ஒரே குறளில் அமைத்திருப்பது சிறப்பு மிக்கதாகும்.

திருக்குறளில் பொருவ கள்ள மதிப்ப உவமம்

பருவ என்ற சொல் மாறு கொள்ளுதல் என்பதையும் கள்ள என்ற சொல் மயங்குதல் என்பதையும் மதிப்ப என்ற சொல் வியத்தல் என்பதையும் குறிப்பதாகும். துன்பம் உடைய வழியில் செல்பவர்களுக்கு மூன்று கோல் போன்றதே ஒழுக்கம் உடையார் வாய் சொல் என்பதை ,

**இழுக்கல் உடையுழி ஊன்றுகோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் குறள் 415**

என்ற குறளில் சொல்லின் மதிப்பை(மதிப்ப) திருவள்ளுவர் பொருத்துதல் செய்கின்றார்.

**திருக்குறளில் வெல்ல வீழ உவமம்**

வெல்லல் என்ற சொல் மேம்படுத்துதல் என்பதை குறிப்பதாகும். வேலை என்ற சொல் தாழ்வுறுதல் என்பதை குறிப்பதாகும். இதில் தாழ்வுறுதல் என்னும் செயலினால் வருகின்ற பயனை வெளிப்படுத்துவதால் வீழல் என்ற சொல் பயனுவமும் தோன்ற காரணமாகிறது. இங்கே ,

**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு குறள் 20**

என வீழ்கின்ற நீரினால் ஏற்படும் பயனை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

**மெய் உவமம்**

மெய் என்ற சொல் உருவமான உடல் என்றும் , அருவமான உண்மை என்றும் இரு பொருளைக் குறிப்பதாகும் ஒரு உடல் அல்லது உடலின் ஒரு உறுப்பிற்கு பிறிதொரு உடல் அல்லது உடலில் உறுப்பினை ஒப்புமைப்படுத்திக் கூறும் இடத்தில் தோன்றுவது மெய் உவமாகும். இந்த மெய் உவமம் கடுப்ப ஏய்ப்ப மருள புரைய ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்னும் எட்டு நிலைகளில் தோன்றும். இதனை ,

**கடுப்ப ஏய்ப்ப மருள புரைய**
**ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்று**
**அப் பால் எட்டே மெய்ப்பால் உவமம் தொல்.உவம.14**

என்று இலக்கண நூல்கள் இயம்புகின்றன.

**திருக்குறளில் ஏய்ப்ப கடுப்ப உவமம்**

ஏய்ப்ப என்ற சொல் ஏய்த்தல்(ஏமாற்றுதல்) என்பதை குறிப்பதாகும். கடுப்ப என்ற சொல்லிற்கு ஒத்திருத்தல் அல்லது ஐயுருதல் என்ற பொருளும் உண்டு. இதனை

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து குறள் 90**

என்ற குறளில் முகர்ந்து பார்த்தாலே குழையும் தன்மையுடது அச்சம். அதுபோல முகம் திரிந்து பார்க்க வருந்தும் தன்மையர் விருந்தினர் என்று இயம்பியுள்ளார் திருவள்ளுவர்.

**திருக்குறளில் ஒடுங்க உவமம்**

ஒடுங்க என்ற சொல் ஒடுங்குதல் என்பதை குறிப்பதாகும். சான்றாக நம்மை வந்து பணியும் பகைவர் கைகளிலும் கொலை கருவி மறைந்திருக்கும் என்பதாக பொருள் கொள்ளும் படியாக ,

**தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து குறள் 88**

என்று அமைத்திருக்கின்றார் வள்ளுவப் பெருந்தகை.

**திருக்குறளில் உரு உவமம்**

உரு என்ற சொல் நிறம் அல்லது வண்ணத்தைக் குறிப்பதாகும். ஒரு பொருளை நிறம் அல்லது வண்ணம் குணம் சுவை அளவு என்பவற்றோடு ஒப்புமைப்படுத்திக் கூறும் இடத்தில் தோன்றுவது உரு உவமம் ஆகும். இந்த உரு உவமானது ,

**போல மறுப்ப ஒப்ப காய்ப்ப**
**நேர வியப்ப நளிய நந்த என்று**
**ஒத்து வரு கிழவி உருவின் உருவம் தொல்.உவம.15**

என போல மறுப்ப ஒப்ப காய்ப்ப நேர வியப்ப நளிய நந்த என்னும் எட்டு நிலைகளில் தோன்றும் என்று இலக்கண நூல்கள் இயம்புகின்றன.

**திருக்குறளில் ஒப்ப உவமம்**

ஊறுதல் அல்லது தோற்றம் தருதல் என்ற பொருளும் போல என்ற சொல்லிற்கு கொள்வதுண்டு. திருக்குறளில், ஆமையானது வெளியிலே தெரிகின்ற தலை கை கால் வால் மற்றும் மெய் போன்ற ஐந்து உறுப்புகளையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் தோற்றம் போல நாமும் நம்முடைய ஐந்து புலன்களையும் அடக்கல் வேண்டும் என்று கூறுகின்றார். அதேபோன்று மறுப்ப என்ற சொல்லிற்கு மீளுதல் என்ற பொருளும் உண்டு. தலைவி தன் கண்களால் தலைவனைக் காதலோடு சிறு பார்வை பார்த்து மீளுதல் என்பது அவன் தன் தலைவி மீது தான் கொண்ட காதலினால் பெற்ற இன்பத்தில் பாதி அல்ல அதைவிட பெரிய இயல்பினை உடையது என்கிறார் வள்ளுவர்.

மேலும் ஒப்ப என்ற சொல் ஒத்தல் அல்லது மகிழ்தல் என்பவற்றையும் குறிப்பதாகும். ஒத்தல் என்பதற்கு உயர்வு ஒருவனை வந்தடைகின்ற போதும் தன் நிலையில் நின்று மாறாத இயல்பினை உடையவனது தோற்றமானது மலையைக் காட்டில் மிகவும் பெரியது என்பதை ,

**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**

**மலையினும் மாணப் பெரிது குறள் 124**

என்று கூறுகின்றார். இங்கே இருக்கின்ற கூறப்பட்டுள்ள தோற்றம் என்ற சொல்லிற்கு ஒத்தல் என்ற பொருள் கொள்ளும் படியாக அமைத்திருக்கின்றார் திருவள்ளுவர். காய்ப்ப என்று சொல்லிற்கு வெப்புறுதல் என்ற பொருளும் உண்டு. எலும்பில்லாத உயிர்கள் மீது சூரிய கதிரின் வெப்பம் தாக்க நேர்ந்தால் துன்பம் ஏற்படும். அறமானது நம்மை வந்தடையுமானால் ஏற்படும் துன்பம் அத்தகைய இயல்பினை உடையது என்பதை,

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**

**அன்பி லதனை அறம் குறள் 77**

என்று கூறும் இடத்து இங்கே இடம்பெற்றுள்ள காய்தல் என்ற சொல்லிற்கு வெப்புறுதல் என்ற பொருள் கொள்ளும்படியாக அமைத்திருக்கின்றார்.

அதேபோல நேர உவமம் என்பது நேர்தல் ஆகும். நம்மை வந்தடைகின்ற செல்வம் நிலையற்றது என்பதால் அது நம்மை வந்தடையும் பொழுதே நிலையான அறங்களை செய்து விட வேண்டும் என்கின்றார் வள்ளுவர் பெருந்தகை. அதேபோன்று வியப்ப என்ற சொல்லிற்கு பரவுதல் என்ற பொருளும் உண்டு. கண்கள்தான் முதலில் தலைவனைக் கண்டு காதல் கொண்டு தனக்கு துன்பம் தரும் நோய் செய்திருந்தாலும் இப்பொழுது நோய் செய்த இந்த கண்கள் தான் அழுது கொண்டும் தூக்கமில்லாமலும் துயரப்பட்டுக் கொண்டும் இருப்பது வியப்பை செய்கிறது. என்பதை,

**ஓஒ இனிதே எமக்கு இன்னநோய் செய்தகண்**

**தாஅம் இதன் பட்டது குறள் 1176**

என்று கூறும் இடத்தில் இங்கே இடம்பெற்றுள்ள இதன் பட்டது என்ற சொல்லிற்கு பரவுதல் என்ற பொருள் கொள்ளும்படியாக அமைத்திருக்கிறார் வள்ளுவ பெருந்தகை. அதேபோன்று நளிய நந்த என்ற உவமங்களையும் திருக்குறளில் பல இடங்களில் நாம் காண முடிகின்றது.

**களவினால் ஆகிய ஆக்கம் அளவிட்டது**

**ஆவது போல கெடும் குறள் 283**

என்று கூறும் இடத்தில் பெருகுவது என்ற பொருள் கொள்ளும்படியாக அமைத்திருக்கின்றார் .

**முடிவுரை**

தெரிந்த ஒன்றைக் கூறி தெரியாத ஒன்றை விளக்கிக் கொள்ள உவமம் என்பது உதவுகின்றது. இத்தகைய உவமையானது வினை பயன் மெய் உரு என்ற நான்கின் அடிப்படையில் உவமை தோன்றும் என்று இலக்கண நூல்கள் இயம்புகின்றன. இத்தகைய உவமையானது திருக்குறளில் எல்லா குறட்பாக்களிலும் இடம் பெற்று வருவதை காண முடிகின்றது. மனித வாழ்க்கையின் எல்லாமாய் விளங்கும் திருக்குறளை கற்று அதன்படி நடப்போம் வாரீர்!